***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.68/2016 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சித்ரா |
| *Father/Husband's Name* | க/பெ. கார்த்திகேயன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 37 |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.07.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பூக்கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

எங்கள் அப்பா வீட்டு பூர்விக சொத்தான 6ம் நம்பர் வாய்க்காலில் உள்ள இடத்தில் நாங்கள் கொட்டகை போட்டு இருந்தோம். கடந்த 12.11.2015 ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் நானும், எனது அம்மா கண்ணம்மாவும் கொட்டகையை பார்க்கும் போது அது சாய்ந்து கிடந்தது. அந்த இடத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அங்கு நின்றுகொண்டிருந்ததால் கொட்டகை ஏன் சாய்ந்து கிடக்கிறது என்று கேட்டோம். உங்கள் கொட்டகை சாய்ந்து கிடந்தால் நாங்கள் என்ன பன்னுவது என்று குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். நான் ஏன் இவ்வாறு பேசிகீறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி எனது தலை முடியை இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார். 1வது எதிரி எ்னனை அடித்துக்கொண்டிருக்கும்போதே எனது அம்மா கேட்டபோது 2 வது எதிரி எனது அம்மாவை அடித்து கீழே தள்ளியதில் அருகில் இருந்த சேத்து வயலில் விழுந்துவிட்டோம். அப்போது அங்கிருந்த 1 வது எதிரியின் அக்கா, அம்மா ஆகியோரும் என்னை தாக்கினர். அன்று இரவு நாங்கள் மன்னார்குடி

அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்துக்கொண்டோம். அங்கு போலீசார் விசாரித்தார்கள்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்களுக்கும், 1 வது எதிரிக்கும் மன்னார்குடி காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள வீடு தொடர்பாகவும், பூக்கொல்லை ரோட்டில் உள்ள இடங்கள் தொடர்பாகவும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. பிரச்சனை தான் இருந்தது. காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள வீட்டிற்கு என்னுடைய அம்மா எந்த வருடம் வந்தார் என்றால் 2014 ம் ஆண்டு. மேற்படி வீட்டிறகு வரும்போது பிரச்சனை செய்து கொண்டு தான் வந்தோம் என்றால் சரிதான். அது எங்கள் வீடு. காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள வீடு வடக்கு பார்த்த தென்புறம் உள்ள ஓட்டு வீடு. அந்த வீட்டிற்கு ஒரு வாசல்படி என்றால் சரிதான். ஆனால் இரண்டு பாகம்.

எங்களுக்கு குடும்ப நண்பராக மன்னார்குடி நெடுவாக்கோட்டையை சேர்ந்த பாலு என்பவர் இருந்து வந்தார். அவர் எங்களுக்கு நிதி உதவி செய்து வருபவர். மேற்படி வீட்டிற்கு எனது அம்மா வருவதற்கு முன் பிரகாஷீம், அவரது அம்மாவும் இருந்தார்கள் என்றால் சரியல்ல. பிரகாஷீம், அவரது அம்மாவும் வந்து செல்வார்கள். எனது அப்பாவின் அம்மா தான் அங்கிருந்தார்.

மேற்படி வீட்டிற்கு முன்பக்க ஜன்னல் இருந்த இடத்தில் புதிதாக பாதையை ஏற்படுத்தி வீட்டிற்கு உள்ளே சென்றோம் என்றால் சரியல்ல. ஏற்கெனவே பாதையை நாங்கள் உபயோகபடுத்தியபோது அவர்கள் அதை பயன்படுத்த கூடாது என்று பிரச்சனை செய்து உங்கள் பங்கில் பாதையை வைத்துக்கொள்ள அறிவுறுத்தியதால் புதிய பாதை ஏற்படுத்தப்பட்டது.

பிரகாஷீம், அவரது அம்மாவும் வந்து செல்வார்கள் என்பதும், வேறு பாதையை நான் புதியதாக உருவாக்கிகொள்ள சொன்னார்கள் என்பதும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாதையை உடைத்து தனி வழி ஏற்படுத்தியது சம்பந்தமாக எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக தான் எதிரி பிரகாஷீக்கு அவருடைய பாட்டி அலமேலு என்பவர் வீட்டை எழுதி கொடுத்து அது தொடர்பாக உரிமையியல்

நீதிமன்றத்தில் வழக்கு நடைப்பெற்று திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்று வீடானது எதிரிக்கு சொந்தமானது என்று தீர்ப்பானது என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கும், எனக்கும், எனது அம்மா கண்ணம்மாவிற்கும், எனது சகோதரிக்கும் எந்த வொரு சம்பந்தமும் இல்லை என்றும், அதில எங்களுடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்காக பொய்யான உறவுகளை பொய்யான ஆவணங்களையும் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்கண்ட உரிமையியல் வழக்கில் நான், கண்ணம்மா, செல்வி ஒரு தரப்பினராகவும், எதிரி பிரகாஷ் ஒரு தரப்பினராகவும், பிரேம்குமார் ஒரு தரப்பினராகவும் என்று வழக்கு நடைப்பெற்றது விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரேம்குமார் யார் என்ன என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பிரேம்குமாரின் அப்பா யார் என்றால் கிருஷ்ணமூர்த்தி. பிரேம்குமாரின் அம்மாவின் பெயர் ராணி. ராணி கிருஷ்ணமூரத்தின் முதல் மனைவி என்றால் சரிதான்.

கொட்டகை போட்டது சம்பந்தமாக எவ்வளவு நீளம், அகலம் எப்போது போட்டோம் என்ற விபரத்தை போலீசாரிடம் சொன்னோமா என்றால் போட்டோ ஆதாரம் கொடுத்துள்ளோம். எப்போது போட்டோம் என்ற விபரத்தை கொடுத்துள்ளோம். கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள கொட்டகை என்பது எங்களுக்கு சொந்தமானது என்று உறுதிபடுத்திக்கொள்ளவதற்காக வேண்டி பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் இருந்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் செல்லாம் என்றால் 1/2 மணி நேரத்தில் செல்லலாம். சம்பவத்தன்று எனது வழக்கறிஞரை சென்று பார்தேனா என்றால் பார்த்தேன். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு போனோம் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகள் இருவரும் இல்லை என்றும், இதுபோன்றதொரு வழக்கை உருவாக்க வேண்டும் என்பதற்காக வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டு பின்னிட்டு மருததுவமனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல.

மறுநாள் காலையில் புகார் கொடுக்க சென்றபோது காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள மனு எழுதுபவரிடம் எழுதி கொண்டுபோய் காவல் நிலையத்தில் கொடுத்தேன். மனுவில் யார் யார் கையெழுத்து செய்தோம் என்றால் நானும், என்னுடைய அம்மாவும் கையெழுத்து செய்தோம். வேறு யார் சாட்சி கையெழுத்து

போட்டார்களா என்றால எனக்கு ஞாபகம் இல்லை.  அந்த புகாரில எதிரிகள் அடித்து சேற்றில் தள்ளியதாக முதல் விசாரணையில் சொன்ன விபரம் எழுதப்பட்டியிருந்தது. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரப்படி நாங்கள் முதல நாள் சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்திற்கு எதிரி பிரகாஷ் அவரது அம்மா அவரது சகோதரி, சகோதரியின் கணவர் ஆகியோர்கள் இருந்த விபரத்தையும் எழுதி கொடுத்துள்ளோம். இது சம்பந்தமாக போலீசார் எப்போது  விசாரித்தாரகள் என்றால் போலீசார் எங்கள் காவல் நிலையத்திலே வைத்து விசாரித்தார்கள்.  வேறு எங்கும் வைத்து விசாரணை செய்யவில்லை.

எங்களுக்கு உடம்பில் ஏற்பட்ட காயத்தை மருத்துவமனையில் மருத்துவரிடம் சொன்னோம் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் நடைபெறவில்லை என்றும், கிருஷ்ணமூர்த்தியின் பெயரால் உள்ள இடங்களை எங்களுடைய சொத்தாக உறுதிசெய்து கொள்வதற்காக பொய்யான புகார் உருவாக்கப்பட்டு அதற்கு ஏற்றாற்போல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நானும், செல்வியும், இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் மகள்கள் அல்ல என்றும், என்னுடைய அம்மா கண்ணம்மா கிருஷ்ணமூர்த்தியின் சட்டபூர்வ மனைவி அல்ல என்றும், இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் சொத்துக்களை ஆக்கிரமித்து செய்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக உரிமை உள்ளது போன்ற தோற்றத்தை உருவாக்க எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கு தயார் செய்து அது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.    Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi